දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
**Ministry of Health & Mass Media**

මගේ අංකය )
எனது இல ) **CF/EXE/06/2025**
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) **2025/06/27**
Date )

பொதுச் சுற்று நிருப கடித இலக்கம் :- **02-111/2025**

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு
பணிப்பாளர் - தேசிய வைத்தியசாலை, கண்டி
பணிப்பாளர் - தேசிய வைத்தியசாலை, காலி
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
உரிய நிறுவனத் தலைவர்களும்

**<u>கேள்திறன் தொழிநுட்பவியலாளர் சேவை தரம் II உத்தியோகத்தர்களுக்கான திணைக்களப் பரீட்சை மற்றும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2025</u>**

சுகாதார அமைச்சில் (MT-06-2016) சம்பள அளவுத்திட்டத்தில் குறைநிரப்பு மருத்துவ சேவைக்கு ஏற்புடைய கேள்திறன் தொழிநுட்பவியலாளரகள் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் 2025.08.23 மற்றும் 2025.08.24 இருதினங்கள் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. **(விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சை ஆங்கில மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்)** பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்**

சுகாதார அமைச்சில் (MT-06-2016) சம்பள அளவுத்திட்டத்தில் குறைநிரப்பு மருத்துவ சேவைக்கு ஏற்புடைய கேள்திறன் தொழிநுட்பவியலாளர் தரம் II இற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் இதுவரை இப்பரீட்சையை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும்:** 2025.07.18 ஆம் திகதியுடன் வகுதி II 'அ' / தரம் II ற்கு நியமிக்கப்படுவதற்கான சேவைக்காலத்தினை பூர்த்திசெய்துள்ள தரம் II ற்கு பதவி உயர்த்தப்படுவதற்கு தகைமை பெறுகிறார் என தாபன தலைவரினால் பரிச்துரைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களது விண்ணபப்படிவங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடிவடிக்கை எடுக்கவும். (தரம் II ற்கு நியமிக்கும் நியமனக் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணபத்துடன் இணைக்க வேண்டியது கட்டாயமாகும்)

03. **விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணபதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணபங்கள் அந்தந்த திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு , "சுவசிரிபாய", இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு 2025.07.18 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் விண்ணபம் அடங்கியுள்ள தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில்" **கேள்திறன் தொழிநுட்பவியலாளர் தரம் II உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2025**" என எழுதப்பட வேண்டும். இந்த வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்று வதற்கு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி பூர்த்தி செய்துள்ளார் என

தனிநபர் கோவையை கையாளும் அலுவலர் உறுதிப்படுத்துத்த வேண்டியதுடன் ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்படவேண்டியதும் கட்டாயமானதாகும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரி யின் முகவரியிடப்பட்ட ரூபா.110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட "9 x 4" அங்குல அளவுடைய கடித உறை ஒன்றும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு

பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள், பிழையான மற்றும் சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

***[கவனிக்கவும்]*** மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - 09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## 04. பரீட்சைக் கட்டணம்

4.1 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் விடயம் ஒன்றிற்கு ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

4.2 இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக்காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றவோ, மீள வழங்கப்படவோ மாட்டாது.

## 05. பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

5.2 ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுடைய கடவுச் சீட்டு

## 06. பரீட்சைத்திட்டம்:

இப்பரீட்சை வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் திணைக்களப் பரீட்சை எனும் இரு பிரிவுகளைக் கொண்டமைந்தது. திணைக்களப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சை, வாய்மூலப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளதுடன் ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகளளைப் பெற வேண்டும்.

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் எனும் இரு விடயங்களை கொண்டமைந்திருப்பதுடன் ஒவ்வொரு விடயத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகள் பெறவேண்டும்

மேற்படி பரீட்சையினை ஒரே தடவையில் / பல தடவைகளில் பகுதி பகுதியாகவோ / விடயங்களான் அடிப்படையிலோ பூரணம் செய்ய முடியும். முதற் தடவையாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் அனைத்து விடயங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

07. பரீட்சைப் பாடத்திட்டம்

**7.1 தாபன விதிக்கோவை மற்றும் ருடைமுறை ஒழுங்குவிதி கள்**

இவ் வினாத்தாள் ஆனது கட்டுரை வினாக்கள் 07 ஐக் கொண்டுள்ளது. அதில் விரும்பிய 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். நேரம் 02 மணித்தியாலம். ஒரு வினாத்தாளுக்கு மொத்தம் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்படும். பரீட்சையில் சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

➢ **தாபன விதிக்கோவையின் அத்தியாயம்**

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV. | கற்கை, பயிற்சி அல்லது கடமையின் நிமித்தம் வெளிநாடு செல்லல் |
| அத்தியாயம் | XXIII. | சிலவகை நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் அவை தொடர்பான நிபந்தனைகள் |
| அத்தியாயம் | XXIV. | சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| அத்தியாயம் | XXV. | தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII. | தொடர்பிணைப்பு வழி |
| அத்தியாயம் | XXVIII. | நிருவாக நடைமுறைகளும், செயல்முறைகளும் |
| அத்தியாயம் | XXX. | அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பாக அரசுக்குள்ள தத்துவங்கள் |
| அத்தியாயம் | XXXIII. | சட்ட மதியுரைகளும், சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XVI. | விடுமுறைப் பிரயாணங்கள் |
| அத்தியாயம் | XLVII. | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII. | ஒழுக்காற்று நடவடிக்கை முறை பற்றிய ஒழுங்குகள் |

**7.2 நிதிப் பிரமாணங்கள்**

இவ் வினாத்தாள் ஆனது கட்டுரை வினாக்கள் 07 ஐக் கொண்டுள்ளது. அதில் விரும்பிய 04 வினாக்களுக்கு விடையளிக்கவும். நேரம் 02 மணித்தியாலம். மொத்தப் புள்ளிகள்-100. சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**நிதிப் பிரமாணத்தின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி,**

| | |
|---|---|
| அத்தியாயம் VI. | அரசாங்கப் பணம் முதலியவற்றின் கட்டுக்காப்பும் கட்டுநிதிகளும் வங்கிக்கணக்குகளும், அரசாங்க பணக் கட்டுக்காப்பு, சுற்றாய்வு சபைகள், மேலதிகப் பற்று வங்கிக் கணக்கு (நி.பி. 315 – 396 வரை) |
| அத்தியாயம் XIII. | வழங்கு பொருட்களும் கட்டுவேலைகளும் சேவைகளும் : வழங்கு பொருட்கள், பணத்துக்கு கொள்வனவு செய்தல், களஞ்சிய சுற்றாய்வு, களஞ்சியப்படுத்தல் நடைமுறை, ஒப்பந்தங்கள், டெண்டர் நடைமுறையில் இருந்து வெளியில் செல்லுதல் (நி.பி. 708 – 775 வரை) |

**7.3.1 விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சை**

இவ்வினாப்பத்திரம் 08 அமைப்புக் கட்டுரை வினாக்களைக் கொண்டமைந்திருப்பதுடன் விரும்பிய 05 வினாக்களுக்க விடையளிக்க வேண்டும். நேரம் 03 மணித்தியாலங்கள்.

விடயப் பரப்பு

i. கேள்திறன் பரிசோதனை
ii. பிறந்த குழந்தைகளின் கேள்திறன் பரிசோதனை சம்பந்தமான அறிவு
iii. கேட்டல் உசாத்துணை கருவிகளை பொருத்துதல்

iv. காது அச்சினை உருவாக்கலும் பொருத்துதல்
v. கேட்டல் உசாத்துணை கருவிகளை கையாளுதல்
vi. கேட்டல் உசாத்துணை கருவிகளை பிளைதிருத்துதல்
vii. நத்தைச்சுருள் மாற்றீடு பதித்தல் சத்திர சிகிச்சைக்கான அபேட்சகத்தன்மை சம்பந்தமான மதிப்பீடு.

7.3.2 விடயம் தொடர்பான வாய்மொழிப் பரீட்சை

விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சைக்குரிய விடயப் பரப்புகளை தழுவியும் சேவையில் ஈடுபடுகையில் எழும் சிக்கல்கள் தழுவியும் அமையும் வாய்மொழிப் பரீட்சையாகும். நேரம் 15 நிமிடங்கள்

7.3.3 விடயம் தொடர்பான செய்முறைப் பரீட்சை

துறைசார்ந்த இயலுமைகள், நடைமுறைகள் என்பவற்றை தழுவியமையும் செயன்முறைப் பரீட்சையாகும். விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சைக்குரிய விடயப்பரப்பும் இதற்குள் உள்ளடங்கும். பரீட்சையைப் பொருத்து தீர்மானிக்கப்படும்.

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. **தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது நிறுவனத்தில் கடமையாற்றும் ஏற்புடைய சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**Web path:- www.health.gov.ik ⟶ staff Access ⟶ Admin ⟶ Circulars**

**கவனிக்கவும் (சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

U.A.S. Harshapriya Sisira Kumara
Deputy Director General (Administration) II
Ministry of Health & Mass Media
"Suwasiripaya"
Colombo - 10.

யூ. ஏ. எஸ். எச். சிசிர குமார
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக

**EXE -A**

மாதிரி விண்ணப்பப் படிவம்

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

## கேள்திறன் தொழிநுட்பவியலாளர் சேவை தரம் II உத்தியோகத்தர்களுக்கான திணைக்களப் பரீட்சை மற்றும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2025

01. (அ) i. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) : ………………………………………………………………

………………………………………………………………………………………………………………

ii. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கிலத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

iii. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் (தமிழில்) : ………………………………………………

………………………………………………………………………………………………………………

iv. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் (தமிழில்):

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ)i. வகுதி II 'அ' / தரம் II ற்கு உயர்த்தப்பட்ட தினம் :……………………………………………………

ii. வகுதி II 'அ' / தரம் II ற்கு உயர்த்தப்பட்ட கடித இல: ………………………………………………

iii. தரம் III ற்கான தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் : ஆம் ☐ இல்லை ☐

*(உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடவும்)*

iv. தரம் III ற்கான தடைதாண்டல் பரீட்சையை பூரணப்படுத்திய திகதி: ………………………………………

v. தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் உள்ளதா? ஆம் ☐ இல்லை ☐

*(உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடவும்)*

ஆம் எனின், கோப்பிலக்கம் ☐ திகதி ☐

vi. தற்போது பெறும் வருடாந்த சம்பளம் :………………………………………………………………

vii. தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

viii. தொலைபேசி இல:

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ix. மின்னஞ்சல் முகவரி : ………………………………………………………………………………

02. நீங்கள் தோற்றுறுவதற்கு விரும்பும் விடயத்திற்கு முன்னதாக தரப்பட்டுள்ள கூண்டில் (✓) அடையாளத்தை இடவும். தோற்றவிரும்பாத விடயங்களுக்கு (✗) அடையாளத்தை இடவும்.

விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சை ☐ தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்குவிதி ☐

கள்நிதிப்பிரமாணம் ☐ விடயம் தொடர்பான பிரயோகப் பரீட்சை ☐ விடயம் தொடர்பான வாய்மொழிப் பரீட்சை ☐

03. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(சிங்களத்தில்)……………………………………………………………………………

(தமிழில்) ………………………………………………………………………………

(ஆ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐ மாகாணசபையினால் ☐

(இ) அதற்குரிய மாவட்டம் : ………………………………………………………………

(ஈ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட "9 X 4" அளவு ரூபா110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 02 இணைக்கப்பட்டு உள்ளதா? ……………………

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ………………………………………

05. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..............................................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
| --- |

06. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : ............................ ............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் உத்தியோகத்தரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர்/பின்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தின் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ள தென்றும் உறுதிப்படுத்துகின்றேன்

திகதி : ............................ ............................................

பெயர், கையொப்பம்

08. **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் .................................................... என்பவர் .................................... யாக இந்நிறுவத்தில் பணிபுரிவதுடன் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், விண்ணப்பதாரி இப்பரீட்சைக்கு தோற்றுவது முதற் தடவை / முதற் தடவை அல்ல என்பதையும உரியவாறு ரூ. ..... பெறுமதியான முத்திரை* ஒட்டப்பட்டுள்ளது/ஒட்ட வேண்டிய அவசியமில்லை என்பதையும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதையும், விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் தனிநபர் கோவையில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக சரியானது என்பதையும், எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ............................ ............................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09. **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................ என்பவர் எனது நிறுவனத்தில் ............................ .................................................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ............................ ............................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு

தலைவரின் கையொப்பம் (இறப்பர் முத்திரை இட்பட வேண்டும்)

* தேவையற்ற விடயங்களை கீறிட்டு வெட்டி விடவும்